பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2032 கார்த்திகை 23 சனிக்கிழமை (08-12-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:13

ஐக்கிய தேசிய முன்னணி அறுதிப் பெரும்பான்மை பெற்றது

புதிய அரசு அமைப்பது குறித்து ஆராய

ரணிலுக்கு ஜனாதிபதி நேற்று அழைப்பு!

பிரதமர் ரட்ணசிறி இராஜினாமா!

கொழும்பு,டிசெம்பர்8

நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அறுதிப்பெரும்பான்மையைப் பெற்றதையடுத்து இதுவரை காலமும் பிரதமராக இருந்த ரட்ணசிறி விக்கிரமநாயக்கா ராஜினாமாச் செய்தார்.

புதிய பிரதமரை நியமிப்பது மற்றும் அமைச்சரவையை அமைப்பது போன்ற விடயங்கள் தொடர்பாக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து இன்று தம்முடன் கலந்துரையாட வருமாறு ஜனாதிபதி குமாரதுங்க, ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நேற்று அழைப்பு விடுத்தார்.

ஐக்கிய தேசிய முன்னணியில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சி தனியாக 109 ஆசனங்களைப் பெற்றது. கூட்டணியின் மற்றொரு கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 5 இடங்களைப் பெற்றது.

225 எம்.பிக்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் 114 ஆசனங்களைப் பெற்றதன் மூலம் அறுதிப்பெரும்பான்மையை ஐக்கிய தேசிய முன்னணி ஈட்டிக்கொண்டது.

கடந்த நாடாளுமன்றத்தில் 107 ஆசனங்களை வைத்திருந்த பொது மக்கள் ஐக்கிய முன்னணிக்கு இம்முறை 77 ஆசனங்கள் மட்டுமே கிடைத்தன.

மாவட்ட ரீதியாக கட்சிகள் பெற்ற ஆசனங்களின் விவரம் வருமாறு:-

தேர்தல் மாவட்டங்கள்	ஐ.தே.க.	பொ.ஐ.மு.	ஜே.வி.பி.	த.வி.கூ.	ஸ்ரீ.மு.கா.	ஈ.பி.டி.பி.	புளொட்
கொழும்பு	12	7	2				
கம்பஹா	9	7	2				
களுத்துறை	5	4	1				
கண்டி	7	4	1				
மாத்தளை	3	2					
நுவரெலியா	5	2					
காலி	5	4	1				
மாத்தறை	4	3	1				
அம்பாந்தோட்டை	4	2	1				
யாழ்ப்பாணம்	1			6		2	
வன்னி	2			3			1
மட்டக்களப்பு		1		3	1		
திகாமடுல்ல	1	2		1	3		
திருகோணமலை	2	1		1			
குருநாகல்	8	6	1				
புத்தளம்	4	3					
அநுராதபுரம்	4	3	1				
பொலன்னறுவ	3	2					
பதுளை	5	3					
மொனராகலை	2	3					
இரத்தினபுரி	5	4	1				
கேகாலை	5	3	1				
மொத்தம்	96	66	13	14	4	2	1
தேசியப்பட்டியல் எம்.பிக்கள்	13	11	3	1	1		
எம்.பிக்களின் மொத்த எண்ணிக்கை	109	77	16	15	5	2	1

ரத்வத்தையும் அவரது மகனும் வெளிநாடு 'ஓட்டம்!'

கொழும்பு,டிசெ.8

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை நேற்று வெளிநாட்டுக்குப் பறந்து சென்றுவிட்டார். அவரை முந்திக் கொண்டு மகன் றொஹான் ரத்வத்தையும் வெளிநாட்டுக்கு ஓடித்தப்பி விட்டார்.

கண்டியில் 12 முஸ்லிம்கள் கொல்லப்பட்டமை மற்றும் 29 வாக்களிப்பு நிலையங்களை மூடவேண்டிய நிலை ஏற்பட்டமை போன்ற பல்வேறு வன்செயல்கள் தொடர்பாக இவர்கள் இருவர்மீதும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இவர்களைக் கைதுசெய்ய வேண்டும் என்று ஐ.தே.க. கோரிக்கை விடுத்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (க)

யாழ்.மாவட்ட புதிய எம்.பிக்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.8

யாழ்ப்பாண மாவட்டத்தின் தேர்தல் முடிவுகள் நேற்றுக்காலை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டன.

அதன்படி தமிழர் கூட்டமைப்பின் சார்பில் 6 பேரும், ஈ.பி.டி.பி. சார்பில் இருவரும், ஐ.தே.க. சார்பில் ஒருவரும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

விருப்பு வாக்குகளின் ஒழுங்கின்படி வீ.ஆனந்தசங்கரி, மாவைசேனாதிராஜா, ஜி.ஜி.கணேந்திரகுமார், என்.ரவிராஜ், அ.விநாயகமூர்த்தி, எம்.கே. சிவாஜிலிங்கம் ஆகியோரும், ஐ.தே.

(6 ஆம் பக்கம் பார்க்க)

வெள்ளிமலை மட்டு. எம்.பி.

மட்டக்களப்பு,டிசெ.8

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் போட்டியிட்ட விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தைச் சேர்ந்த ஞானமுத்து கிருஷ்ணபிள்ளை (வெள்ளிமலை) நாடாளுமன்றத்துக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் சார்பில் தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பில் போட்டியிட்ட இவர் மட்டக்களப்பு மாவட்டத்தில் விருப்பு வாக்குகளின் அடிப்படையில் இரண்டாம் இடத்தில் உள்ளார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பொ.செல்வராஜா விருப்பு

(6 ஆம் பக்கம் பார்க்க)

நாடாளுமன்றில் முதலாவது பௌத்த பிக்கு!

கொழும்பு,டிசெ.8

இலங்கை நாடாளுமன்ற வரலாற்றில் பௌத்த பிக்கு ஒருவர் முதன்முறையாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார்.

காலி மாவட்டத்தில் பொ.ஐ.முன்னணி சார்பில் போட்டியிட்ட பத்தேகம சமித தேரோ எம்.பியாகத் தெரிவாகியுள்ளார்.

இவர் தென் மாகாண சபையின் ஓர் உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது. (கு)

ரணில் விக்கிரமசிங்கவுக்கு 4 லட்சம் விருப்பு வாக்குகள்

கொழும்பு,டிசெ.8

கொழும்பு மாவட்டத் தேர்தலில் ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க 4 லட்சத்து 15 ஆயிரத்து 680 வாக்குகளைப் பெற்று முன்னணி நிலை பெற்றார்.

மிலிந்த மொறகொட (1,34,132 வாக்குகள்), ரவி கருணாநாயக்கா (1,29,993), முகம்மது மஹ்ரூப், கருணாசேன கொடித்துவக்கு, காமினி லொக்குகே, பந்துல குணவர்த்தன எம்.எச்.முகம்மது, மனோ கணேசன், ஜயந்த கெட்டகொட, டிரோன் பெர்னாண்டோ நியந்த பெரேரா ஆகியோர் அதிக விருப்பு வாக்குகளைப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

ஐ.தே.க. -41லட்சம்
பொ.ஐ.மு.-33லட்சம்
ஜே.வி.பி.- 8லட்சம்

இந்தத் தேர்தலில் ஐ.தே.கட்சிக்கு மாவட்ட மட்டத்தில் அளிக்கப்பட்ட வாக்குகளின்படி 96 ஆசனங்களும், தேசியப்பட்டியலில் 13 ஆசனங்களும் கிடைத்துள்ளன. அக்கட்சி பெற்றுள்ள மொத்த வாக்குகளின் எண்ணிக்கை 40 லட்சத்து 86 ஆயிரத்து 96 ஆகும்.

பொ.ஐ.மு. 77 ஆசனங்களைப் பெற்றுள்ளது. மாவட்ட மட்டத்தில் 66 ஆசனங்களும் தேசிய பட்டியல் மூலம் 11 ஆசனங்களும் அதற்குக் கிடைத்தன. அது பெற்றுக்கொண்ட மொத்த வாக்குளின் எண்ணிக்கை 33 லட்சத்து 30 ஆயிரத்து 815

(6 ஆம் பக்கம் பார்க்க)

ஜெனரல் சரத்முனசிங்க 'அவுட்'! செல்லச்சாமியும் தோல்வி!!

கொழும்பு,டிசெ.8

முன்னாள் பிரதி சபாநாயகரும் அண்மையில் கட்சி மாறி, குருநாகல் மாவட்டத்தில் ஐ.தே.கட்சி சார்பில் போட்டியிட்டவருமான மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க இந்தப் பொதுத் தேர்தலில் தோல்வியடைந்தார்.

அமைச்சர்கள் இந்திக குணவர்த்தன, சேரசிங்க ஆகியோரும் - பிரதி அமைச்சர்கள் மேர்வின் சில்வா, மொண்டி கோபல்லவ, றஜீப் மஜீத், பேர்னாட் கூரே, யு.எல்.ஏ.மொஹிமன், கணேசமூர்த்தி ஆகியோரும் - பொ.ஐ.மு. தரப்பில் தோல்வியடைந்தனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

தீவகத் தூக்குதல் சம்பவம்:

மதனராஜா, நெப்போலியனை கைது செய்யப் பிடிவிறாந்து

யாழ்ப்பாணம்,டிசெ.8

கடந்த 30ஆம் திகதி நூறாந்தனையில் தமிழர் கூட்டமைப்புப் பிரமுகர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டது தொடர்பாக கைது உத்தரவு பிறப்பிக்கப்பட்டும் இன்னும் கைது செய்யப்படாமல் இருக்கும் ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவர் என்.மதனராஜா, ஈ.பி.டி.பியின் தீவகப் பொறுப்பாளர் நெப்போலியன் ஆகியோரைக் கைதுசெய்வதற்கு யாழ். நீதிமன்றம் பகிரங்கப் பிடியாணை

(6 ஆம் பக்கம் பார்க்க)

ரெலோ ஆதரவாளர் இருவர் வவுனியாவில் சுட்டுக்கொலை!

வவுனியா,டிசெ.8

வவுனியா வைரவப் புளியங்குளத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ரெலோ இயக்கத்தின் ஆதரவாளர் இருவர் பலியாகினர்; நால்வர் காயமடைந்துள்ளனர்.

பொன்னுத்துரை ஜட்கஜன், சிவபாலன் சாந்தமூடன் ஆகிய இளைஞர்களே கொல்லப்பட்டனர்.

தேர்தலில் தமிழர் கூட்டமைப்பு வெற்றிபெற்றதையடுத்து வீதிகளில் இனிப்பு வழங்கிவிட்டு இவர்கள் லொறியில் வந்தபோதே இச்சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வைரவப் புளியங்குளம் - பண்பாரிக்குளம் சோதனைச் சாவடியில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

காரைநகர் சிவன்கோயில் (ஈழத்துச் சிதம்பரம்)

இராஜகோபுர புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

சிவனேயச் செல்வர்களே!

நிகழும் விஷ வருடம் கார்த்திகை மாதம் 25ஆம் நாள் (10-12-2001) திங்கட்கிழமை பகல் 10.30 மணி தொடக்கம் 12 மணி வரையுள்ள சுபநேரத்தில் சிவன், ஐயனார் கோயில்களின் இராஜகோபுர கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள்பாலித்துள்ளது. அத்தருணம் முதல்நாள் நடைபெறும் கிரியா காலங்களிலும் அடியார்கள் வருகை தந்து சுவாமி தரிசனம் செய்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்வீர்களாக.

கிரியா கால விவரம்

நாளை (9-12-2001) ஞாயிறு மாலை 3 மணியளவில் கருமாரம்பம், விநாயக வழிபாடு, வாஸ்துசாந்தி, ஸ்தூபி ஸ்தாபனம்.

10-12-2001 திங்கட்கிழமை காலை 7 மணிக்கு சிவன், ஐயனார் சுவாமிகளுக்கு ஸ்நபனா அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து 10.30 மணிக்கு மேல் கும்பம் விதிப் பிரதட்சணம், இராஜகோபுர கும்பாபிஷேகம், சிவாச்சார்ய சம்பாவனை, கலைஞர்கள் கௌரவிப்பு.

மாலை 2.00 மணிதொடக்கம் சோமவார அபிஷேகம், சுவாமி திருவீதியுலா, மாணிக்கவாசகர் மடாலயத்தில் மாகேஸ்வரபூசை என்பன இடம்பெறும்.

கோபுர தரிசனம் கோடி புண்ணியம்.

ஈழத்துச் சிதம்பரம், காரைநகர். (C/19675)

ஆதீன கர்த்தாக்கள், திருப்பணிச் சபையினர்.

யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் உரும்பிராய்.

பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டமும் ஒன்றுகூடலும்

காலம் : 23-12-2001 ஞாயிற்றுக்கிழமை

நேரம் : மு.ப. 10.00 மணி.

இடம் : பாடசாலை மண்டபம்.

அனைத்துப் பழைய மாணவர்களையும் தவறாது சமுகம் தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(95695) - செயலாளர்.

கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் நெறியாளர்குழு உறுப்பினரும், துன்னாலை வேம்படியைச் சேர்ந்தவருமான

தம்பிராசா புஸ்பராசா

அவர்களின் மறைவுச் செய்தியைக் கேள்வியுற்று துயர் அடைகின்றோம். அவரின் இழப்பினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கரவெட்டி.

நெறியாளர்கள், பணியாளர்கள், அங்கத்தவர்கள். (C/19676)

ஸ்கந்தாவின் இதய அஞ்சலி

எமது கல்லூரி மைந்தனும், ஆசிரியராக, உப அதிபராக பல வருட காலம் சிறந்த பணியாற்றிய பெருந்தகையுமான

அமரர் C.அகிலேஸ்வரன் B.Sc.

அவர்களின் பிரிவு குறித்து கல்லூரிச் சமுகம் மிகுந்த வேதனையடைகிறது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

ஸ்கந்தவரோதய கல்லூரி, கந்தரோடை, சுன்னாகம் (95697)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

கல்வி ஆண்டு - 2002 இல்

தரம் 03 முதல் 11 வரை

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன

எல்லா வகுப்புகளிலும் ஒருசில அனுமதிகள் மட்டுமே வழங்கப்பட உள்ளதால் டிசம்பர் 10ம் திகதியுடன் அனுமதிகள் வழங்குவது நிறுத்தப்படும்.

The Express Institute (95004)

Irupalai, Kopay.

அதிபர்

படையினரின் தாக்குதலில் 7 இளைஞர் பலி!

செங்கலடி,டிசெ.8

மட்டக்களப்பு, மியாங்குளம் - கொழும்பு வீதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 7 இளைஞர்களின் சடலங்கள், நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் வாழைச்சேனை மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டன.

இது தொடர்பான விசாரணையும், வைத்திய பரிசோதனையும் வாழைச்சேனை மாவட்ட வைத்திய சாலையில் இடம்பெற்றன.

மியான்குளம் பகுதியில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் அணி ஒன்றின்மீது படையினர் நடத்திய தாக்குதலில் 7விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டதாக விசேட ஊடகத் தகவல் மையம் நேற்று அறிவித்துள்ளது. (ஒ)

இ.தொ.காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு கூடுதல் வாக்குகள்!

கொழும்பு,டிசெ.8

நுவரெலியா மாவட்டத்தில் ஐக்கிய தேசிய முன்னணியில் இணைந்து போட்டியிட்ட இ.தொ.க. பொதுச் செயலாளர் ஆறுமுகம் தொண்டமான ஆகக் கூடுதலாக 1,21,421 விருப்பு வாக்குகளையும் முத்து சிவலிங்கம் 1,07,338 விருப்பு வாக்குகளையும் பெற்றுள்ளனர்.

இவர்களோடு ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த நவின் திஸாநாயக்க 74,894 வாக்குகளையும், கே.கே.பியதாஸ 54,206 விருப்பு வாக்குகளையும் பெற்றுத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பொ.ஐ.முன்னணியில் போட்டியிட்ட சி.பி.ரட்ணாயக்க 49,673 விருப்பு வாக்குகளையும், குமார திஸாநாயக்க 35,504 விருப்பு வாக்குகளையும் பெற்றுத் தெரிவாகினர்கள். பொ.ஐ.முவில் 4 தமிழர்கள் போட்டியிட்டும் ஒருவரும் தெரிவாகவில்லை.

மூதூர் முஸ்லிம் முதன் முறையாக எம்.பியானார்

திருகோணமலை,டிசெ.8

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களாக தமிழ்க் கட்சிகள் கூட்டமைப்பில் இரா.சம்பந்தனும், பொ.ஐ.முன்னணியில் எம்.கே.டி.எஸ்.குணவர்த்தனவும், ஐ.தே.கவில் எம்.ஏ.ஏம்.மஹ்ரூப், கே.எம்.தௌபிக் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுள் கே.எம்.தௌபிக் தவிர ஏனையோர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களாவர்.

கிண்ணியாவை வசிப்பிடமாகக் கொண்ட தௌபீக் மூதூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 1947ஆம் ஆண்டிலிருந்து மூதூர் தொகுதியில் முஸ்லிம் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பட போதலும், அவர்கள் கிண்ணியாவிலிருந்தே தெரிவாகினர். இம்முறையே முதன்முதலாக மூதூரைச் சேர்ந்த ஒரு முஸ்லிம் தெரிவாகியுள்ளார். (க)

ஒலிநாடா வெளியீடு நாளையே நடக்கும்

யாழ்ப்பாணம்,டிசெ.8

யாழ்.போதனா வைத்தியசாலை வேளாங்கண்ணி ஆலய ஆன்மீகக் குரு ஏ.அன்புராசாவின் 'அன்புக் காணிக்கை' ஒலி நாடா வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமையே நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று மாலை 4.30 மணிக்கு நடைபெறவிருந்த இந்நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆஸ்பத்திரி வீதியில் உள்ள அமலமரித் தியாகிகள் தொடர்பக தலைமையகத்தில் நடைபெறுமென வெளியீட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (க-9)

நெல்லியடியில் விபத்து!

நெல்லியடி,டிசெ.8

மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தில் சிக்கிய குடும்பஸ்தர் ஒருவர் தனது இருபற்களை இழந்ததுடன், முகத்திலும் படுகாயம் அடைந்தார்.

இச்சம்பவம் நேற்று நண்பகல் ஒரு மணியளவில், நெல்லியடி பஸ் நிலையப் பகுதியில் இடம்பெற்றது.

வதிரி கரவெட்டியைச் சேர்ந்த சின்னத்துரை ரதிமணி (வயது 46) என்பவரே காயமடைந்து மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (க-109)

To God Be The Glory

16th ANNIVERSARY THANKS - GIVING SERVICE OF ASSEMBLY OF GOD, CHUNNAKAM

A Special Morning Worship Service is To Be Held On Sunday, The 9th December, 2001 at 9.00 a.m. (SLT)
Homily Will Be Delivered BY
Rev.Dr.David Balasingh
(Lecturer, Southern Asia Bible College, Bangalore, India.

All Are WelCome! You Will Receive The Power of God's Word And Presence of The Holly Spirit Produce A New Life Within you.

Assembly of God, Library View, K.K.S. Road, Chunnakam.

(95705)

மறைந்தும் மறையாத மாணிக்கத்தின் 53 ஆவது பிறந்த நாள் நினைவு

பிறப்பு 08 - 12 - 1948

இறப்பு 19 - 09 - 2001

அமரர் அந்தோனிப்பிள்ளை அல்பிரட் யோகராஜா

(ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தரும், U.N.D.P. உத்தியோகத்தரும்)

பாசத்தின் பிணைப்பினால் எமை இணைத்து
அன்பின் சிறகினால் எமைக் காத்த எம் தந்தையே!
நீங்கள் பிறந்த இந்நன்னாளில் இனிய
வாழ்த்துக்கள் சொல்ல நீங்கள் இல்லையே.

02, இராசாவின் தோட்ட ஒழுங்கை, யாழ்ப்பாணம். (95703)

உங்கள் பிரிவால் துயருறும்: அன்பு மனைவி, அருமைப் பிள்ளைகள்.

மரண அறிவித்தல்கள்

திருமதி ஜெயலட்சுமி பாலசுப்பிரமணியம்

திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஜெயலட்சுமி பாலசுப்பிரமணியம் 07-12-2001 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் க.பாலசுப்பிரமணியத்தின் (ஓய்வூதியர் விலைமதிப்பீட்டுத் திணைக்களம்) மனைவியும் சச்சிதானந்தன் (Service Station கோப்பாய்) - சரோஜினிதேவி தம்பதியினரின் அன்பு மகளும், கந்தையா - செல்லமுத்து தம்பதியினரின் பாசமிகு மருமகளும், பிரசாத் (கொழும்பு), திருமதி ஜெசிந்தியா செல்வமனோகரன், உருத்திரா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

141, கேணியடி திருநெல்வேலி. (C/19674)

தகவல்: க.பாலசுப்பிரமணியம் (கணவன்) (கீரை பாலா)

திருமதி அலமேலு அம்மா முத்துச்சாமிக் குருக்கள்

நீர்வேலி வாய்க்கால் தரவைப் பிள்ளையார், கோயிலடியைப் பிறப்பிடமாகவும், தச்சன்தோப்புப் பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட அலமேலு அம்மா முத்துச்சாமிக் குருக்கள் அவர்கள் நேற்று (07-12-2001) வெள்ளிக்கிழமை மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துச்சாமிக் குருக்களின் மனைவியும், அப்பாச்சாமிசர்மா, பாகீரதி அம்மா, சீதாலக்ஷ்மி, வசந்தகுமாரி ஆகியோரின் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08-12-2001) சனிக்கிழமை காலை 10 மணிக்கு கரவெட்டியில் நடைபெறும்.

தச்சன்தோப்புப் பிள்ளையார் கோயில், கரவெட்டி. (C/19677)

தகவல்: ப.சச்சிதானந்தக்குருக்கள் (மருமகன்)

திருமதி கந்தையா செல்லம்மா

நுணாவில் மேற்கு, சாவகச்சேரியை நிரந்தர வசிப்பிடமாகவும் 123, சிவநகர், உருத்திரபுரத்தைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா செல்லம்மா கடந்த 12.11.2001 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளை கந்தையா (முன்னாள் தலைமை ஆசிரியர், யா/நுணாவில் மேற்கு அ.த.க.பாடசாலை) அவர்களின் அன்பு மனைவி ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 12.11.2001இல் அவரது தற்காலிக வசிப்பிடத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

123, சிவநகர், உருத்திரபுரம். (95700)

தகவல்: திருமதி க.சுரேந்திரா

		சனி	வி. ரா.
செவ்.	இராசிச் சக்கரம்		
▲ புத. கேது	▲ சூ. வெ.		சந்.

மாற்றம்:-

9.12.2001இல் உத்தரம் 4ஆம் பாதம் - சந்திரன் கன்னி இராசியில் நிற்கும். அரசியலில் மாற்றங்கள் ஏற்பட்டாலும், அதிககாலம் நீடிக்காது. பலவினங்கள் - பலவித தொல்லைகள் கொடுக்கும். கலகம் பிறந்து நியாயம் தலை நீட்டும் நிலை ஏற்படும். இந்தியாவில் வடக்கு முனையில் எதிர்ப்புக்கள் தொடரும். இராணுவ அழுத்தங்கள் தலைதூக்கும். ஆப்கானிஸ்தானில் புதிய ஆட்சியில் பேதம்-பிரிவு போட்டிகள் இருக்கும். மேற்கு உலகின் அழுத்தம் மத்திய கிழக்கு நாடுகளில் பதற்றநிலை - இராணுவ தொடர்நிலை அழுத்தங்கள் ஏற்படும். இந்து சமுத்திர, பசுபிக் சமுத்திர பிராந்திய நாடுகளில இயற்கையின் அழுத்தம் இருக்கும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

இந்த வார இராசி பலன்

09.12.2001 ~ 15.12.2001

மேடம்

பதவிகளைப் பிடிக்கச் சிலர் பல பிரயத்தனங்களைச் செய்கிறார்கள். அதனால் நல்லவர்கள் - அப்பாவிகள் பாதிக்கப்படுகின்றார்கள். பாதிக்கப்பட்டவர்கள் கொதித்து எழுந்தால் - அதன் விளைவு பயங்கரமானதாக இருக்கும். எனவே தொழில ஸ்தானத்தில் உங்கள் சக ஊழியர்களுடன் அவதானமாக இருக்கவும், கிழக்குத்திசையில் இலாபம், புதிய முயற்சி அனுகூலம், புதிய ஆலோசனை பெறல், அரச பயம் என்பனவும், கூட்டுவருத்தமும், வயிற்றுப் பொருமல், நெஞ்செரிவு என்பன வரும். குருத்துறை மருந்துத்துறை, பிரயாணத்துறை, அரசியல்துறை போன்ற துறையினர்கள் நன்மையடைவார்கள்.

அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், புதன், வியாழன்.

இடபம்

சுயநலத்தால் மேலுள்ள பதவிகளைப் பிடிக்க கீழ் உள்ளவர்கள் சுழன்று வருவது இயற்கையாகும். மாடிக்கட்டடத்தில் வேலை செய்கிறவர்களும் மண்ணில் மிதித்துத்தான் நம் பூமியில் போகிறார்கள். எனவே அடித்தள அறிவுடன் தொழில் பீடங்களில் படியேறிவந்தவர்களுக்கு எப்பொழுதும் பயம் இல்லை. மாமன் மச்சானுடன் கோபம் - ஆசையால் துன்பம் - பந்தயம் - அவதி - வயிற்றில் நோய் - தொண்டை வருத்தம் - சலவருத்தம் என்பன வரும். உணவுதுறை, நகைத்துறை, அச்சுத்துறை, கம்பியூட்டர்துறை, செய்தித்துறை, பிரயாணத்துறை போன்ற துறையினர்களுக்குப் பலவித நன்மைகள் கிடைக்கும்.

அதிர்ஷ்டநாள்கள்:- புதன், வியாழன்.

மிதுனம்

என்ன அவசரம்? தமது நேரத்தைப் பக்குவமாக ஆக்கபூர்வமான தாக்க முனையாதவர்கள் தமது வாழ்வை வளமாக்க முடியாது எனவே தொழில் ஸ்தானததில் கடமையில் கண்ணாக இருங்கள். முயற்சியில் ஊக்கம், வீடு மனைச் செலவு, பூர்வீகத்தவர் தொடர்பு, அரசியல்வாதிகளின் உதவிகள், கோயில் தொண்டு, இடமாற்றங்கள் என்பன வரும். அவசரப் புத்தியால் கலக்கம், மலச்சிக்கல், முதுகு வலி, என்பன வரும். எண்ணெயத்துறை, வியாபாரத்துறை, சினிமா, செய்தித்துறை, கொம்பியூட்டர்துறை, ஆசிரியத்துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு மாற்றங்கள் கொடுக்கும்.

அதிர்ஷ்டநாள்கள்:- புதன், வியாழன்.

கடகம்

கட்சிகள் மாறலாம். அரசாங்கம் மாறலாம் - குழப்பங்கள் பெருகலாம். மக்களின் வளங்கள் பெருகி, உற்பத்தி ஏற்றமதியாகி ஸ்திர நிலைப்பாடான நாட்டின் பொருளாதாரம் உயர்ந்து வராமல் இருந்தால் அனைததும் வீணாகும். எனவே தொழில் ஸ்தானத்தில் லாபங்கள் வர உழையுங்கள். சஞ்சல மனம், சகோதரங்களுக்காகப் போராட்டம், பொருளால் மனக்கவலை என்பனவுடன், இரத்த அழுத்தம், பித்தக் கொதிப்பு, சளித்தொல்லை, மூட்டு வலி, உஷ்ணபீடை வரும். விவசாயத்துறை, இசைததுறை, போட்டோத்துறை, பண்ணைததுறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

அதிர்ஷ்டநாள்கள்:- புதன், வியாழன், சனி.

சிங்கம்

நீதியைப் பெறவேண்டுமாயின் நெடுந்தூரமும் - அதிககாலமும் சென்றாலும், காத்திருந்து பெறவேண்டி வந்தாலும் தயங்கக் கூடாது எனச் சிந்திப்பீர்கள் உண்மைதான். எத்தனையோ சஞ்சலம் அலைமோதித் தெளிவாகும். உங்கள் உதவி பெற்று உங்களையே எடுத்தெறிந்து அவமானபடுத்தியவர் அவதிப் படுவதைப் பார்ப்பீர்கள். தொழில ஸ்தானத்தில் நிதானமாக செயற்பட்டபடி இருப்பீர்கள். புதிய பொறுப்புக்கள் - ஆலோசனைகள் - எதிர்பாலாரின் உதவிகள் என்பனவும் - சளித்தொல்லை, கண்கூச்சம், வாய்வுத் தொல்லை என்பன கொடுக்கும். குருத்துறை, சட்டத்துறை, மருந்துத்துறை, எண்ணெய்த்துறை போன்ற துறையினர்களுக்கு இலாபங்கள் ஏற்படும்.

அதிர்ஷ்டநாள்கள்:- புதன், வியாழன், சனி.

கன்னி

பலர் பலவிதமான பொய்களைச் சொல்லி காரியங்களைச் சாதிக்கின்றார்கள். தொழில் பீடத்தில் புதிய பொறுப்புக்கள் கொடுக்கும். இடமாற்றம் கொடுக்கும். குடும் பத்தினரின் நன்மைக்காக ஓடியாடித் திரிவீர்கள். பொருள் வரும். அரச அதிகாரிகளின் உதவிகள், அரசியல்வாதிகளின் உதவிகள் கொடுக்கும். தூரத்துச் செய்தி ஒன்று தேடிவரும். சினிமா மோகம் - பொருள் செலவுகள் அதிகரிக்கும். சளி, இடுப்புவலி, கிருமித்தாக்கம் கொடுக்கும். வைத்தியம் செய்துவரவும். ஹோட்டல் துறை - சந்தைத்துறை, குருத்துறை - பிரயாணத்துறை போன்ற துறையினர்களுக்கு பல மாற்றங்கள் வரும்.

அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், புதன், வியாழன், சனி.

துலாம்

தலைவரிடம் ஒருவர் ஏன் முறைப்பாடு கொடுக்கின்றார். அவருக்குக் கீழ் உள்ளவரில் நம்பிக்கை இல்லை, ஊழல் இருக்கின்றது என நினைப்பதனால் ஆகும். தொழில்ஸ்தானத்தில் பல மாற்றங்கள் கொடுக்கும். வீட்டில் புதிய பொறுப்புகள் ஏற்படும். தூரத்துச் செய்திகள் நன்மை தரும். நரம்புச் சோர்வு, பயம், தலைவலி, நாரிநோ என்பன கொடுக்கும். அயலவர்கள் தொல்லை கொடுப்பார்கள். வைத்தியத்துறை, ஆசிரியத்துறை, பாதுகாப்புத் துறை, ஹோட்டல் வேலை, கோயில்துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் அதிக நன்மைகள் அடைவார்கள்.

அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், புதன், வியாழன், சனி.

விருச்சிகம்

நடைமுறைகள் - சட்டதிட்டங்கள் சில வேளையில் சரியான பதிலைத் தரமாட்டாது. படிக்க வந்தவர்கள் அரசியலை ஏன் கலக்கச் சிந்திக்கிறார்கள்? அதனால் படிக்கும் படிப்பு - ஸ்தலம் - நீர்வாகம் பாதிக்கப்படாது என எண்ணமுடியாது. இதை இடித்துச் சொல்லாமலும் பெரியவர்கள் இருக்கமுடியாது. அயலில் பொறாமை - பிறருக்கு ஆலோசனை - உடல்நிலைத் தாக்கம், வரம்பேசுதல், பிள்ளைகளாலும், சகோதரர்களாலும் பெருமைப்படல், சில வேளை கடும்போக்கு, கோபித்தல் என்பனவும் - இரத்த அழுத்தம், நரம்பு, சிரசு, தொண்டை, குளிர் உபாதை என்பன வருத்தும். இரும்புத்துறை, வங்கித்துறை, குருத்துறை, விவசாயத்துறை போன்ற துறையினர் நன்மை அடைவார்கள்.

அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், புதன், சனி.

தனுசு

உண்மில் வந்தவர்கள் எப்பொழுதும் உடன் இருக்கவும் மாட்டார்கள். உறவில் வந்தவர்கள் நித்தமும் உதவுபவர்களாக இருக்கவும் மாட்டார்கள். அந்நியர்கள் பலர் உதவுவார்கள். தொழில் ஸ்தாபனத்தில் ஆலோசனைகளைச் சொல்லுவீர்கள் - வீடு வாகனச் செலவுகள் அதிகரித்தல், பொருள் வரவு ஏற்படல், பொருள்கள தவறுதல், இன ஜனத்தார் அடிக்கடி வருவார்கள். இடுப்பு, வயிறு, எலும்பு, குடல் நரம்பு சம்பந்தமான நோய்கள் வரக்கூடும். பாதுகாப்புத்துறை, சட்டத துறை -அரசியல்துறை, சமயத்துறை, குருத்துறை போன்ற துறையினருக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், புதன், சனி.

மகரம்

சிறிய உலகம், பெரிய எண்ணங்கள் வளர்கின்றன. அதனால் பல பிரச்சினைகள் உருவாகின்றதாலும், தொழில் ஸ்தானத்தில் படபடப்பான நிலை அடிக்கடி இருக்கும். அங்கு நீதி - உண்மைக்குப் போராடடம் இருக்கும். எதிர்பாலார்கள் எதிர்ப்பார்கள். பொருள் களவுபோகும், இடமாற்ற யோசனை, வாகனச் செலவு, பணவரவு இருக்கும். மூட்டுவலி, தலைவலி, கால்விறைப்பு, மூலவலி, உஷ்ண சளி பீடைகள் கொடுக்கும். குருத் துறை, சட்டத்துறை, சமயத் துறை, வியாபாரத்துறை போன்ற துறையினர்களுக்கு அதிக நன்மைகள் ஏற்படும்.

அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், புதன், சனி.

கும்பம்

உலகம் எம்மைப் பார்க்கும் பொழுது நாம் உலகைப் பார்த்து செயற்பட்டு - புகழ்பெற்று, செல்வம் பெற்று வாழலாம் என எண்ணுவதில் தவறில்லை. கடமையெனத் தொழில் ஸ்தானத்தில் போராடுவீர்கள். நல்ல மனம் கொண்ட நீங்கள் பிறருக்குப் பிரயோசனமான ஆலோசனைகள் சொல்லுவீர்கள். கால் வருத்தம், படபடப்பு, மறதி, வரட்சி நிலை, பயப்பாடு, சளித்தொல்லை என்பன வருத்தும். கறுப்புநிறப் பொருளில் கவனமாக இருக்கவும். வடமேற்கு - தெற்கு திசையிலிருந்து நற்செய்திகள் வரும். நகைத்துறை செய்தித் துறை, ரிவி, டெக், கம்பியூட்டர்துறை ஹோட்டல்துறை, ஆசிரியத்துறை போன்ற துறையினர் நன்மை அடைவார்கள்.

அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், வியாழன், சனி.

மீனம்

எந்த விசயத்திலும் மனதைத் தளரவிடக்கூடாது. திரும்பத் திரும்பப் போராடித்தான் எந்த வெற்றியையும் எவரும் அடையமுடியும் தொழில ஸ்தானத்தில் நன்மை, தீமை கலந்த நிலை ஏற்படும். பொருள் களவு, இடமாற்றம், நீடித்தத் தொழில் திட்டம், நண்பர்களின் உதவிகள், தூரதுச் செய்தி என்பன நிகழும். சளித் தொல்லை, இரத்த நோய், இடுப்பு வலி, கால் பிடிப்பு என்பனவும் வரும். மருந்துத்துறை, குருத்துறை, இசைத துறை போன்ற துறையினர்களுக்குப் பலவித மாற்றங்கள் நிகழும்.

அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், வியாழன், சனி.

மகாதேவா ஜோதிடம்

விஞ்ஞான செயலமர்வு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.8

யாழபாணம் கல்வி வய கணித விஞ்ஞான வள நிலையத்தால் நேற்றும் இன்றும் நடத்தப்பட விருந்த விஞ்ஞான செயலமர்வு தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கபப்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

உ.கிழங்குச் செய்கை மழையினால் பாதிப்பு

கடந்த சில நாள்களாகத் தொடர்ந்து பெய்த மழை காரணமாக உருளைக்கிழங்கு செய்கையில்ஈடுபட்டிருந்த விவசாயிகள் பெரும் நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உருளைக்கிழங்கு விதைகளை மூடி மழை வெள்ளம் தேங்கி நிற்பதனால், அவை அழுகி நாசமாகி விடும் நிலை ஏற்பட்டுள்ளது. விவசாயிகள் பெருந்தொகையான பணத்தைச் செலவு செய்து நீர் இறைக்கும் இயந்திரங்கள் மூலம் நீரை வெளியேற்றி வருகின்றனர்.

இதேவேளை, வெங்காயம், முள்ளங்கி போன்ற பயிர்களும் அழுகல் நோய்த்தாக்கத்திற்கு உள்ளாகிவருகின்றன. (ம-133)

மூவர் காயம்!

ஆனமடுவ பகுதியில் உள்ள பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஆதரவாளர் ஒருவரது வீட்டின் மீது கடந்த புதனன்று நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் மூன்று பேர் படுகாயமடைந்தனர்.

அடையாளம் தெரியாத நபர்களால் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில், வீடும் பலத்த சேதமடைந்தது. காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஜ-6-4-9)

சிறுமியும் பெண்ணும் புத்தளத்தில் உயிரிழப்பு!

புத்தளம் மாவட்டத்தில் அடையாளந்தெரியாத நபர்கள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் 7வயதுச்சிறுமி உட்பட இருவர் உயிரிழந்தனர்.

முதலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் புத்தள மாவட்ட வேட்பாளர் எச்.எம்.சமரகிரியின் வாகனத்தைத் தாக்கிச் சேதமாக்கிய அடையாளந்தெரியாத நபர்கள், அந்த வாகனத்தில் பயணஞ்செய்த இரு வேட்பாளர்களைக் கடத்திச்சென்ற போது இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்திலேயே இடையில் சிக்கிய 7 வயதுச சிறுமி ஒருவரும் 60வயதுப் பெண் ஒருவரும் உயிரிழந்தனர்.

கடத்திச் செல்லப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றித் தெரியவரவில்லை. (ஜ-6-4-9)

மனமார்ந்த நன்றிகள்

05-12-2001 அன்று நடைபெற்ற 12 ஆவது நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் எம்மை ஆதரித்து வாக்களித்த யாழ்.மாவட்ட மக்களுக்கும், எமது கட்சி சார்பாகவும் நாடாளுமன்றப் பிரதிநிதி ஒருவரைத் தெரிவு செய்த வன்னி மாவட்ட மக்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

விடிவிற்கான யுத்தம் முடிவுற வேண்டும்.
நிரந்தரத் தீர்வுடன் சமாதானம் தோன்ற வேண்டும்.

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்)
தலைமைக் காரியாலயம்,
யாழ்ப்பாண மாவட்டம்.

(95529)

31 ஆம் நாள் நினைவலைகள்

மண்ணில் 09 - 11 - 1961

விண்ணில் 08 - 11 - 2001

அமரர் புவிராசா ஸ்ரீசந்திரராசா

(ஆசிரியர், யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்)

அன்புள்ள அப்பாவே!
எங்கள் குடும்பத்தின் தீபமே!
முடிசார்ந்த மன்னரும்
முடிவில் ஒரு பிடி சாம்பராவார்.
எங்கள் வாழ்வில்
பொறாமை கொண்ட காலன்
உங்களை அழிக்க,
புரியா நோயில் வந்தானோ?
ஓங்கிடும் எமது உள்ளத்தின்
துயரைத் தாங்கிய இறைவன்
தயை புரிவாராக!
எக்கணமும் வாழ்வீர்கள் எம்முடன்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

(95704)

சின்னஞ்சிறு விளம்பரம்

இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட்ஸ், சேவல் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.No. 3529, 2867. (95579)

இறைச்சிக்கோழிகள் புறொயிலா, கல்பேட் என்பன சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: இல.227, பிறவுண் வீதி, (கலட்டிச் சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணம். (95631)

விற்பனைக்கு

வேப்பமரம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: 95 A, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (95682)

வீடு விற்பனைக்கு

சண்டிலிப்பாய், ஆலங்குளாயில் அமைந்த பிரயோசனத்துடன் கூடிய புதிய வீடும் காணியும் (8 பரப்பு), வயல் (7 பரப்பு) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: த.இராஜகோபால், "கோகுலம்", சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய். (95678)

தவறிவிட்டது

கீரிமலை றோட், சித்தங்கேணியைச் சேர்ந்த க.ரவீந்திரனின் டோகா-கட்டார் டிறைவிங் லைசன்ஸ் (அதில அரபிக் எழுத்துகள் அச்சிடப்பட்டது) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்கூறிய விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (95643)

தொல்புரம் மேற்கு, சுழிபுரத்தைச் சேர்ந்த வெங்கடாசலபதி நீலாயதாட்சியின் தேசிய அ.அட்டை சுழிபுரத்தில் இருந்து கல்வியங்காடு வரும் பொழுது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இசிவபாக்கியம், G.P.S. வீதி, கல்வியங்காடு என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். (95685)

சந்திரசேகரம் யசோதாஸின் விசேட அ.அட்டை (இல.091502862) வட்டுக்கோட்டைக்கும் அராலிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வட்டுக்கோட்டை கிழக்கு, மாவடியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (95692)

அபூர்வ ஜோதிடம்

வட்நாட்டு சித்த மருந்தியல் மூலம் மரணப்படுக்கையில் விழுந்தோரும் காப்பாற்றப்படல், நற்பலன் நடக்கும் காலத்தை அறிதல். தினமும் 8.30-2.00. ஆடியபாதம் வீதி, சரஸ்வதி மில் லேன், கொக்குவில் கிழக்கு. (95679)

திருமண சேவை

கிறிஸ்தவ மதத்தில் ஆண், பெண் மணமக்கள் தேவை. நேரில் வந்து தொடர்பு கொள்ளவும்:- துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (95687)

புறொயிலர் விற்பனைக்கு

மலிவு விலையில் புறொயிலர் விற்பனைக்கு உண்டு. மொத்தமாகவும். சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
1kg: 140/=

அண்ணா பாம்,
ஸ்ரேசன் றோட்,
இணுவில்.

ஏரே வீட்டில் மூன்று சைக்கிள்கள் திருட்டு

கல்வியங்காட்டுப் பகுதியில் இரவு வேளை வீடு ஒன்றில் விடப்பட்டிருந்த மூன்று சைக்கிள்கள், கடந்த செவ்வாய்க்கிழமை இரவு திருடப்பட்டுள்ளன. கல்வியங்காடு, புதிய செம்மணி வீதியில் வசிக்கும் முளியாண்டி மூர்த்தி என்பவருடைய வீட்டிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவதினம் இரவு மழைபெய்து கொண்டிருந்தவேளை வீட்டில் உள்ளோர் ஆழ்ந்த நித்திரையில் இருந்த போது வீட்டு (முன் விறாந்தையில் விடப்பட்டிருந்த 15ஆயிரம் பெறுமதியான மூன்று (துவிச்சக்கரவண்டி) சைக்கிள்களையும் - உடுபுடைவைகள், சில எலக்ரோனிக்சாமான்களையும் திருடர்கள் திருடிச்சென்றுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இவரது வீட்டில் ஒருவாரத்துக்கு முன்னரும் கூட்டில் அடைக்கப்பட்டிருந்த கோழிகளும் திருடப்பட்டிருந்தன. (ம-180)

கால்நடை அபிவிருத்திக் கருத்தரங்கு

புன்னாலைக்கட்டுவன்,டிசெ.8

புன்னாலைக்கட்டுவன் பிரதேசத்தில் கால்நடைகள் வளர்க்கும் பொது மக்களுக்கு கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தால் நடத்தப்படும் கால்நடை அபிவிருத்திக் கருத்தரங்கு, இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு விக்கினேஸ்வரா மணிமண்டபத்தில் இடம்பெறும்.

மேற்படி கருத்தரங்கில் கால் நடைகளைப் பராமரிக்கும் முறைகள், கால்நடைகளில் தற்போது ஏற்பட்டுவரும் நோய்களும் அதற்குரிய மருத்துவ சிசிச்சைகளும், கால்நடை உணவுகள் மற்றும் கால் நடை இனவிருத்தி போன்றன குறித்துக் கருத்துரைகள் வழங்கப்படும். (ம-133)

31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 16 - 10 - 1967

மறைவு 08 - 11 - 2001

திருமதி கிஸ்ணபிள்ளை சசிகலா

கண்டீடி விழிப்பதற்குள் கதை முடிந்து போனதன்றோ!
அன்புடனும் பண்புடனும் பேசிய இன்சொற்கள் எங்கே சசி?
அழகுத் திருமுகத்தில் அரும்பும் புன்சிரிப்பைக் காணமுடியுமா?
எம்மையெல்லாம் தவிக்கவிட்டு எங்குதான் சென்றுவிட்டீரோ?
உம்முடன் பழகிய நாள்கள் நெஞ்சில் நிறைந்து நிற்கின்றன!
நீர்தந்த மழலையின் முகத்தில் நின் மதிமுகமே ஒளிவீசிப் பிரகாசிக்கின்றது!

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!

வினோ வாசிகசாலை,
போயிட்டி,
நீர்வேலி. (95677)

உங்கள் பிரிவால் துயருறும்:
சி.பாலசிங்கம் குடும்பத்தினரும்,
க.சோமு குடும்பத்தினரும்.

33ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

திருமதி கனகசபை நேசமலர்

(காரைநகர்)

மலர்வு: 21.10.1942 உதிர்வு: 06.11.2001

மாதம் ஒன்று உருண்டாலும் ஆறிடுமோ எங்கள் மனம், மாதங்கள் பல மறைந்தாலும் எம் நினைவில் நீங்கிடுமோ உங்கள் முகம்? பாசத்துடன் எம்மை வளர்த்து ஆளாக்கி ஆறாத்துயரில் ஆழ்த்தி எம்மை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவு என்றும் எம் நெஞ்சைவிட்டு நீங்காது அம்மா!

அம்மாவின் இறுதிக்கிரியைகளில் நேரடியாகக் கலந்து கொண்டு எம்மைத் தேற்றியவர்களுக்கும், தந்தி மூலமும், தொலைபேசி மூலமும் தொடர்புகொண்டு எம் துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டோருக்கும் மற்றும் பல வழிகளில் உதவிபுரிந்தவர்களுக்கும் உற்றார், உறவினர் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும், சபிண்டீகரண நிகழ்வும் *இன்று (08.12.2001) சனிக்கிழமை* இல. 11, கஸ்தூரியார் லேன், யாழ்ப்பாணம் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வுகளிலும் தொடர்ந்து நடைபெறுகின்ற மதியபோசனத்திலும் தங்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

11, கஸ்தூரியார் லேன்,
யாழ்ப்பாணம். (C/19672)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கண்ணீர் அஞ்சலி

எமது சபையின் தலைவர்
திரு.ச.லலீசன் அவர்களின்
அன்புத் தந்தையார்

இளையதம்பி சந்திரமௌலீசன்

அவர்களின் மறைவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு 'எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அமரரின் ஆத்மா சாந்தியடைய எம் பெருமாட்டியை இறைஞ்சுகின்றோம்.

இலந்தைத்திடல்,
சரசாலை.

ஸ்ரீ வீரமாகாளி அம்மன்
தொண்டர் சபை.

(95686)

கண்ணீர் அஞ்சலி

எங்கள் கல்லூரி ஆசிரியர்கள்
திரு.சி.சிவலிங்கம் அவர்களின்
அன்புத் தந்தையாரும்
திருமதி இ.சிவலிங்கம் அவர்களின்
அன்பு மாமனாருமாகிய

சி.சிவபுண்ணியம்

அவர்கள் 05-12-2001 அன்று காலமாகிவிட்டார். அவரது மறைவால் துயரில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம். அமரரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- நலன்புரிக் கழகம்,
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

(95693)

மரண அறிவித்தல்கள்

திருமதி முருகேசு தங்கம்மா

அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், இராஜசிங்கம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முருகேசு தங்கம்மா 05.12.2001 புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இன்று (08.12.2001) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் கோம்பையன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.111/13, இராஜசிங்கம் வீதி.
யாழ்ப்பாணம். (C/19671)

தகவல்:
செல்வநாயகம், ஆனந்தராஜா.
(பிள்ளைகள்)

திருமதி நடராசா அருந்ததி

06.12.2001 அன்று நடைபெறவிருந்த திருமதி நடராசா அருந்ததி அவர்களின் இறுதிக்கிரியைகள் தவிர்க்கமுடியாத காரணத்தால் இடம்பெறவில்லை.

இறுதிக்கிரியைகள் பற்றியவிவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

முல்லையடி.
பண்டத்தரிப்பு. (95691)

தகவல்:
வி.நடராசா (ஓவியர்)
(சத்தியா அன் கோ)

திருமதி கந்தையா தங்கம்மா

(கச்சாய், கொடிகாமம்.)

கொடிகாமம், கச்சாயைப் பிறப்பிடமாகவும், உடுப்பிட்டியைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா தங்கம்மா 05.12.2001 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், யோகேஸ்வரி (தேவி, புத்தூர்ச் சந்தி), யோகராஜா (ஹொலண்ட்), யோகநாதன் (ஹொலண்ட்), கங்காதேவி (உடுப்பிட்டி), நாகேஸ்வரி (ஹொலண்ட்), யோகாநந்தன் (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சின்னையா, விநாயகமூர்த்தி (A.V.M. போட்டோ), நாதன் (ஹொலண்ட்), சந்திரா (ஹொலண்ட்), பேபி (ஹொலண்ட்), சுதா (ஹொலண்ட்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற கனகரத்தினம் மற்றும் செல்வரட்ணம், மகேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2001) சனிக்கிழமை கீழ்க்காணும் முகவரி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வல்வை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

A.V.M. போட்டோ கலையகம்,
சந்தை வீதி, உடுப்பிட்டி,
வல்வெட்டித்துறை. (95683)

தகவல்:
A.V.மூர்த்தி (மருமகன்)

சின்னையா கனகசபை (ஜப்பான்)

(நயினாதீவு)

நயினாதீவு 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சின்னையா கனகசபை நேற்று முன்தினம் (06.12.2001) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பு - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மருமகனும், உருக்குமணியின் அன்புக் கணவரும், கலையதி (ஜேர்மனி), தர்மராஜா (சுவிஸ்), பத்மராஜ் (வர்த்தகர்), கஜநிதி (கனடா), நாதன், உமாகாந்தா ஆகியோரின் அன்புத் தந்தையாரும், நற்குணலிங்கம் (ஜேர்மனி), ரேணுகா (சுவிஸ்), செல்வரஞ்சினி கமலநாதன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், ரன்யா, மாறியோ, பிரதாப், கவிதாரணி ஆகியோரின் அன்புப் பேரனும், வள்ளியம்மை, இராசநாயகம், பூபதி, சற்குணம், சண்முகநாதன், குணசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கோபாலபிள்ளை, சண்முகரெத்தினம், சோமசுந்தரம், தணிகாசலம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (07.12.2001) வெள்ளிக்கிழமை நயினாதீவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

5ஆம் வட்டாரம்,
நயினாதீவு. (95690)

தகவல்:
க.பத்மராஜ் (மகன்)
(வர்த்தகர்)

உதயன்

அமைதித் தீர்வுக்கு நல்ல தருணம்

புதிய அரசு அமைப்பது குறித்து கலந்துரையாடுவதற்கு வருமாறு ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழைப்பு விடுத்திருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி வெற்றிவாகை சூடி பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுக் கொண்டுள்ள நிலையில் இந்த அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது.

ஐக்கிய தேசிய முன்னணியில் இடம் பெற்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சி, நாடாளுமன்றத்தில் 109 இடங்களையும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஐந்து இடங்களையும் பெற்றுள்ளன. இது கிடைக்க வேண்டிய அறுதிப் பெரும்பான்மையிலும் விட ஓர் ஆசனம் கூடுதலாகும்.

கடந்த தடவை - ஓராண்டுக்கு முன்னர் - பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சி அமைத்தது போன்றதொரு நிலைமை இது.

ஆனால் அப்போது பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு எதிர்த்தரப்பிலிருந்த ஏனைய கட்சிகள் பொ.ஐ.முன்னணி அரசைக் கவிழ்ப்பதில் விடாப்பிடியாக இருந்தன.

ஆனால் இம்முறை ஐக்கிய தேசிய முன்னணிக்கு எதிர்த்தரப்பில் இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதினெட்டுப்பேர் தமிழர்கள். தமிழர்களுக்கு எதிரான தீவிர நிலைப்பாட்டை ஐக்கிய தேசிய முன்னணி அரசு எடுக்காதவரை அவர்கள் அந்த அரசுக்கு எதிராகப் போவதற்கு வாய்ப்புகள் குறைவு.

அந்த வகையில், ஓராண்டில் - குறைவாழ்வில் - கவிழ்ந்து, ஆட்சியிலிருந்து வெளியேறும் பொ.ஐ.மு அரசை விட, அமையப்போகும் புதிய அரசு ஸ்திரம் மிக்கதாக இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

நாட்டையே உலுப்பிக் கொண்டிருக்கும் தேசியப் பிரச்சினையான இனப்பூசலுக்குத் தீர்வுகாணும் முயற்சியில் இலங்கைத் தமிழர்களின் ஏக பிரதிநிதிகளாகத் தமிழீழ விடுதலைப் புலிகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தும் பதினைந்து தமிழ்ப் பிரதிநிதிகள் ஒன்றாக நாடாளுமன்றத்துக்குப் போய் எதிரணி வரிசையில் இம்முறை அமரப் போகின்றார்கள்.

அதே கோரிக்கையைத் தீவிரமாக வலியுறுத்தும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் அரசுத் தரப்பில் முக்கிய பிரமுகராக அமரப் போகின்றார்.

இவர்கள் தவிர, இலங்கைத் தமிழர் விவகாரத்தில் பேச்சு மூலம் தீர்வு காண வேண்டும் என்பதைத் தீவிரமாக வலியுறுத்தும் மலையகத் தலைவர்களான பெ.சந்திரசேகரன், ஆறுமுகம் தொண்டமான், முத்து சிவலிங்கம் மற்றும் மனோ கணேசன் போன்றோரும் இந்த முறை ஆளும் ஐக்கிய தேசிய முன்னணித் தரப்பில் நாடாளுமன்றத்தில் இடம் பெறப் போகின்றனர்.

அதைவிட, சிஹல உறுமய, பூமிபுத்ர போன்ற சிங்களத் தீவிரவாதக் கட்சிகளை சிங்கள மக்கள் அடியோடு நிராகரித்திருப்பதால் அவர்கள் இம்முறை நாடாளுமன்றத்துக்கு வரப் போவதில்லை.

அத்தோடு -

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதில் தீவிர ஈடுபாடுடையவர் போல அண்மைக் காலத்தில் தன்னை வெளிப்படுத்தி வந்திருக்கும் ரணில் விக்கிரமசிங்க, பிரதமராக ஆட்சியை அமைக்கப் போகின்றார்.

ஒட்டுமொத்தத்தில் -

பேச்சு மூலம் தீர்வு காண்பதில் தீவிரமுடைய - அதை வலியுறுத்துகின்ற - சக்திகளின் கட்டுப்பாட்டின் கீழ் புதிய நாடாளுமன்றம் அமையப் போவது வரவேற்கத்தக்க ஓர் அம்சமாகும்.

இந்த வாய்ப்பைச் சரிவரப் பயன்படுத்தி இனச்சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வுகாண - அமைதியை விரும்பும் சகல தரப்பினரும் - முன் வரவேண்டும்.

நிறைவேற்று அதிகாரத்தைத் தம் கைவசம் வைத்திருக்கும் ஜனாதிபதியும் அரசியல் கருத்து வேறுபாடுகளை அப்பால் வைத்துவிட்டு அமைதித் தீர்வு முயற்சிக்கு ஒத்துழைப்பாராயின் நிரந்தரத் தீர்வை எட்டுவது அவ்வளவு கஷ்டமான ஒன்றாக அமையமாட்டாது என்பது திண்ணம்.

"புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்கத் தயாராகின்றோம்" - என்று அரசு அமைக்கப்போகும் ரணில் விக்கிரமசிங்க விடுத்த அழைப்புக்குச் சாதகமாக ஜனாதிபதி குமாரதுங்க நடந்து கொள்வாராயின், நாடு அமைதி வழியில் நடைபோடுவது நிச்சயம்.

அடாவடித்தனங்களை துணிச்சலுடன் எதிர்த்து நின்ற குடாநாட்டு மக்கள்!

ஆனந்தசங்கரி பெருமிதம்

யாழ்ப்பாணம்,டிசெ.8

அண்மைய தேர்தல் காலத்தில் அடாவடித்தனங்களைத் துணிச்சலுடன் எதிர்த்து நின்று, எமக்கு வாக்களித்துள்ளனர் யாழ்.குடாநாட்டு மக்கள். அவர்களின் பேராதரவினாலேயே நாங்கள் பெரு வெற்றியீட்டியுள்ளோம்.

- இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட துணைத் தலைவர் வீ.ஆனந்தசங்கரி நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

தமிழர் கட்சி கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றியீட்டியுள்ள ஆனந்தசங்கரி குடாநாட்டு மக்களுக்கு நன்றி தெரிவித்து வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த பொதுத் தேர்தலில் தமிழ்மக்கள், தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்புக்கு கொடுத்த பேராதரவுக்கு, தனது நன்றியைத் தெரிவிக்க த.வி.கூட்டணி கடமைப்பட்டுள்ளது.

பல்வேறு அடாவடித்தனங்களை எதிர்த்து நின்று எமது வேட்பாளர்களுக்கு பேராதரவு கொடுத்தும் பல்வேறு வகையிலும் உதவிய அன்புள்ளங்களுக்கு எமது நன்றி.

இதுவரை அடக்கி ஒடுக்கப்பட்டிருந்த தீவக மக்கள் கூட, துணிச்சலுடன் செயற்பட்டு, எமக்குப் பேராதரவு தந்துள்ளனர்.

தீவகம் சென்ற எமது வேட்பாளர்களையும், தொண்டர்களையும் மிருகத்தனமாகத் தாக்கியும், வாள்களால் வெட்டியும், இரு உயிர்களைப் பலி எடுத்தும், வேறு பல வகையிலும் துன்புறுத்தியுள்ளது ஒரு குழு.

இத்தகைய கொடுமைகளின் மத்தியில் துணிச்சலுடன் எமக்கு வாக்களித்த தீவக மக்களுக்கும், பல்வேறு வகையிலும் நமக்குதவிய அனைவருக்கும் தமிழ்க் கூட்டமைப்பு மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றின் சார்பிலும் எமது சார்பிலும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

- இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-ஒ)

அடக்குமுறைக்கு எதிரான

தமிழ் மக்களின் எழுச்சியே எமது கூட்டமைப்பின் வெற்றி

அனைவருக்கும் நன்றி கூறுகிறார் மாவை

யாழ்ப்பாணம்,டிசெ.8

தமிழ் பிரதேசத்தின் மீதான பேரினவாத அரசுகளின் அடக்குமுறைகளுக்கு எதிராகத் தமிழ் மக்களின் எழுச்சியே எமது கூட்டமைப்பின் பெரு வெற்றியாகும்.

- இவ்வாறு தமிழ்க் கட்சி கூட்டமைப்பின் புதிய நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரவுசெய்யப்பட்டிருக்கும் மாவை.சோ.சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

நேற்று மாவை சேனாதிராசா தமது கூட்டமைப்புக்கு வாக்களித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்து வெளியிட்ட செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கூட்டமைப்பு பெரு வெற்றியீட்டியதற்கும் மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினராக என்னைத் தெரிவு செய்ததற்கும் கடினமாக உழைத்த தமிழ்த்தேச மக்களுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். சிங்கள பேரினவாத அடிமைத் தளையிலிருந்து தமிழ்த் தேசத்தின், தமிழ் இனத்தின், விடுதலைக்கு உழைக்க வேண்டிய அதேவேளை, அதற்கு எதிரான ஜன நாயக விரோத, பேரினவாத அரசுகளின் முகவர்களையும், நம் தமிழ் மண்ணில் எம் மீது அடக்குமுறையையும், அடாவடித்தனங்களையும் மேற்கொண்ட கட்சிகளையும் நிராகரிக்கப் போராடுபவர்களாகவும் நாம் இருந்தோம்.

அத்தகைய ஜனநாயக மீட்சிக்கான முயற்சியின் போதுதான் தீவுப் பகுதி நாரந்தனையில் கடந்த 28ஆம் திகதி எம்மீது கட்டவிழ்த்து விடப்பட்ட கொடூரமான ஆயுதமுனைத் தாக்குதல்களினால் இரு உயிர்கள் பறிக்கப்பட்டும் பலர் படுகாயமடைந்தும் பெருமதிப்புமிக்க விலையை கொடுக்க வேண்டி ஏற்பட்டது.

அவ்வாறான நிலையிலும் தீவகத்தில் நாம் எமது ஜனநாயக கடமைகளை செய்ய முடியாது இருந்த போதிலும் 4,500க்கும் அதிகமான மக்கள் எமது அணிக்கு வாக்களித்திருந்தமை எம்மைப் பெருமைப்படுத்துவதாக இருந்தது. அதை விடவும் யாழ்.மாவட்டத்தில் தமிழ்த் தேசத்தின் மீதான அரசுகளின் அடக்குமுறைகளுக்கு எதிராக அணிதிரண்ட மக்கள், ஒரு லட்சத்திற்கும் அதிகமான வாக்குகளை அளித்து எமக்கு வெற்றி சேர்த்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

இத்தகைய மக்கள் எழுச்சிக்கும், தேர்தல் வெற்றிக்கும், ஆக்கபூர்வமான பணிகளை ஆற்றிய மத பீடங்களுக்கும் மனிதநேய அமைப்புகளுக்கும் குறிப்பாக உயிரைத் துச்சமாக மதித்து செயற்பட்ட பல்கலைக்கழக மாணவ சமூகத்திற்கும், ஊடகவியலாளர்களுக்கும் கட்சி ஆதரவாளர்களுக்கும், இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

- இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார். (க-9)

கூடைப்பந்தாட்ட இறுதிப்போட்டி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.8

ஹட்டன் நஷனல் வங்கியின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தி வரும் கழகங்களுக்குகிடையிலான கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று நடக்கவிருந்த இறுதிப்போட்டி தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

நாளை

கார்த்திகை 24
ஞாயிற்றுக்கிழமை
திதி : நவமி
முற்பகல் 11.24 வரை.
நட்சத்திரம் : உத்தரம்
முற்பகல் 9.24 வரை.
சுபநேரம் : 9.18 - 10.48
ராகுகாலம் : 4.48 - 6.18
(பழைய நேரப்படி)

நாட்டு நடப்பு

ஆட்சி மாற்றம்

இருமல் கிழவி இனி இல்லை என்று
பெருமைப் படுகின்ற பெரியோரே!
கும்மல் கிழவி குயர் தர மாட்டாளென்று
நம்புவதும் நலமோ நவில்?

- *விகடகவி.*

கூட்டமைப்புடன் சேர்ந்து செயற்பட தயார் என்கின்றார் மகேஸ்வரன்

மக்களுக்கு நன்றி தெரிவித்து அறிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.8

எந்த இலட்சியத்துக்காக நான்கு கட்சித் தமிழர் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதோ அந்த இலட்சியத்திலிருந்து கூட்டமைப்புத் தவறாதவரை அதனுடன் சேர்ந்து அந்த இலட்சியங்களை அடைவதற்காக உழைக்கத் தயாராக இருக்கிறேன் - இப்படி யாழ். மக்களுக்கு நன்றி தெரிவித்துத் தாம் விடுத்த அறிக்கையில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தேசவிரோத சக்திகளைத் தோற்கடித்த குடாநாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிப்பது தனது முதற்கடமை என்று அந்த அறிக்கையில் தி.மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தேசவிரோத சக்திகளுக்கு எதிராக - அந்த சக்திகளின் அச்சுறுத்தல்கள், பசப்பு வார்த்தைகள் ஆகியவற்றைப் புறக்கணித்து - வாக்களித்ததற்காகவும் -

விடுதலைப் புலிகளே தமிழினத்தின் ஏகபிரதிநிதிகள் என்ற உண்மையை உலகுக்கு அடித்துச் சொல்லும் வகையில் வாக்களித்ததற்காகவும் -

என்மீது - எனது செயற்பாடுகளின் மீது - நம்பிக்கை கொண்டு வாக்களித்து என்னை மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினராக்கியதற்காகவும் -

அனைவருக்கும் என் நன்றியைக் கூறுகிறேன்.

என்னோடு தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட சமயம், தேசவிரோதிகளின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான ஆதரவாளர் -

எமக்காகப் பிரசாரத்துக்குச் சென்ற சமயம் தேசவிரோதிகளால் தமது வாகனங்கள் சேதத்துக்கு உள்ளாகி இழப்புக்களைச் சந்தித்த வாகன உரிமையாளர்கள் -

நெடுந்தீவு, ஊர்காவற்றுறைப் பகுதிக்கு எமது கட்சி வாக்களிப்பு முகவர்களாகச் சென்ற சமயம் தேசவிரோத சக்திகளினால் கடும் தாக்குதலுக்கு இலக்கான ஆதரவாளர்கள் - என்னோடு தோளோடு தோள் நின்று உழைத்து எனது வெற்றிக்காகப் பாடுபட்ட எனது சக வேட்பாளர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் -

ஆகியோருக்கு எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

உங்கள் அனைவரது எதிர்பார்ப்பையும் பூர்த்தி செய்யும் விதத்தில் ஆக்கபூர்வமான வழியில் பணியாற்றுவேன் என உறுதிகூறுகின்றேன் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-ஒ)

ஜி.சீ.ஈ. சாதாரண தர பரீட்சை திடீரென ஒத்திவைப்பு!

ஆணையாளர் நேற்று அறிவிப்பு

கொழும்பு,டிசெ.8

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை காலவரையறையின்றிப் பிற்போடப்பட்டுள்ளதாகப் பரீட்சை ஆணையாளர் நேற்று மாலை திடீர் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார்.

எதிர்வரும் 11 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவிருந்த இந்தப் பரீட்சை தற்போதைய சூழ்நிலை காரணமாகப் பிற்போடப்படுவதாக அவரது அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பரீட்சை முன்னர் அறிவித்ததைப் போன்று எதிர்வரும் 11 ஆம் திகதி ஆரம்பமாகும் என்று நேற்று நண்பகல் இலங்கை வானொலிச் செய்தியில் அறிவிக்கப்பட்டது. ஆனால் நேற்று மாலை 6 மணிக்கு ஒலிபரப்பான செய்தியில் "பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது" என்ற ஆணையாளரின் அறிவிப்பு வெளியானது குறிப்பிடத்தக்கது.

வாக்களிப்பு தினத்தன்று

விரிவுரையாளர் தாக்கப்பட்டதற்கு யாழ்.பல்கலையில் ஆர்ப்பாட்டம்!

பொதுத் தேர்தல் வாக்களிப்புத் தினமான கடந்த புதன்கிழமை யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் அன்ரனி ரிச்சேட் ஆயுதமேந்தியோரால் தாக்கப்பட்டதைக் கண்டித்து நேற்று யாழ்.பல்கலைக்கழகத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பிற்பகல் ஒரு மணிமுதல் 2மணி வரை நடத்தப்பட்ட இந்த அடையாள ஆர்ப்பாட்டத்தை யாழ்.பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது.

பல்கலைக்கழக இராமநாதன் மண்டப முன்றிலில் கூடிய விரிவுரையாளர்கள் சுலோக அட்டைகளை ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

"ஜனநாயகத்தின் பெயரால் மனித உரிமைகளைத் தின்னும் அடாவடித்தனங்களைத் தடுக்கவேண்டும்" -

"காடைத்தனம் புரிவதற்குப் பல்கலைக்கழகம் தேர்தலகளம் அல்ல" -

"சக விரிவுரையாளர் ரிச்சேட் மீதான தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறோம்" -

என்பன போன்ற வாசகங்கள் சுலோக அட்டைகளில் எழுதப்பட்டிருந்தன.

நேற்று இடம்பெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து, யாழ். பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு, யாழ்பல்கலைக்கழகத் துணைவேந்தர், யாழ்.அரச அதிபர் ஆகியோருக்கு மேற்படி சம்பவம் தொடர்பாகத் தமது கண்டனக் கடிதத்தை யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் இன்று அனுப்பிவைக்கவுள்ளது.

வாக்களிப்புத் தினத்தன்று கந்தர்மடம், பழம் வீதியில் மோட்டார் சைக்கிளில் வந்த விரிவுரையாளர் அன்ரனி எட்மண்ட் ரிச்சேட் மற்றும் அவரது சகோதரரான பல்கலைக்கழக மாணவர் அனஸ்ரீன் றோச் ஆகியோர் மோசமாகத் தாக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டது தெரிந்ததே. (ஒ-180)

ஆட்சி மாற்றம் வேண்டும் என்பதற்காக

பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் பொதுமக்கள் தேர்தலில் வாக்களிப்பு!

ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்புக் குழுத் தலைவர் கருத்து

கொழும்பு,டிசெ.8

ஆட்சிமாற்றம் ஏற்படவேண்டும் என்பது மக்களின் நீண்டகால ஆதங்கம்.

இதற்காகவே பல்வேறு அச்சுறுத்தல்கள், கஷ்டங்களுக்கு மத்தியில் அவர்கள் தேர்தலில் வாக்களித்தனர்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஜோன் குஸ்ணகான்.

கடந்த புதனன்று நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளைக் கண்காணித்த இவரும் இவரது குழுவினரும் நேற்று விசேட அறிக்கை ஒன்றை கொழும்பில் வெளியிட்டனர். அந்த அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அரசின் ஆதரவுடன் இயங்கிய அரசியல் வாதிகள் தேர்தலை நீதியாகவும் நியாயமாகவும் நடத்தவிடாமல் தடுத்தனர். ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் தேர்தல் வன்முறைகளில் ஈடுபட்டுள்ளனர். இது குறித்த முக்கிய தகவல்கள் எம்மிடம் உள்ளன.

அரசின் கருத்தை ஏற்கமுடியாது

தேர்தலை நீதியானதாகவும், நியாயமானதாகவும் நடத்தியுள்ளதாக அரசு கூறியுள்ளது. ஆனால் அரசின் இந்தக் கருத்தை நாம் ஏற்கமாட்டோம். ஆட்சியில் உள்ள கட்சி என்ற காரணத்தினால் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி பாரபட்சமாக நடந்தது மட்டுமல்லாது, வன்முறைகளையும் கட்டவிழ்த்துவிட்டிருந்தது.

வடக்கு - கிழக்கில் உள்ள ஆயுதம் தரித்த தமிழ்க் குழுக்கள் தேர்தலைக் குழப்ப முயன்றன. சில ஐ.தே.கட்சி உறுப்பினர்களும் இவ்வாறு நடந்துகொண்டனர்.

முன்னணி அரசியல் தலைவர்கள் தங்களுக்கென ஆயுதக் குழுக்கள் வைத்திருப்பதை நிறுத்தவேண்டும்.

இந்தத் தேர்தலில் முறைகேடுகள் புரிந்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டும். சட்டத்தின் ஆட்சியைப் பாரபட்சமின்றி அனைவர் மீதும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென்பது ஜனநாயகத்தின் முக்கிய அம்சமாகும். இந்த விவகாரத்தில் தோல்வியுற்றால் இலங்கை உலகத்தின கண்களில் மிக மோசமான நாடாகவே கருதப்படும். - என்று அதில் உள்ளது.

(க-7-9)

மீள் வாக்களிப்பு யோசனையை கைவிட்டார் தேர்தல் ஆணையாளர்

கொழும்பு,டிசெ.8

சர்ச்சைக்குரிய சில வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு ரத்துச் செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அங்கு மீள் வாக்களிப்புத் தேவையில்லை என்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா நேற்றுத் தீர்மானித்தார்.

அதேசமயம் வடக்கு - கிழக்கிலும் மீள் வாக்களிப்பு நடைமுறைச் சாத்தியமற்றது என்று இராணுவமும் பொலீஸாரும் கருதுவதால், அவ்விரு மாகாணங்களிலும் மீள் வாக்களிப்பு நடத்தும் யோசனையை அவர் கைவிட்டுள்ளார்.

இதையடுத்து உத்தியோகபூர்வத் தேர்தல் முடிவுகளை தேர்தல் ஆணையாளர் நேற்று மாலை அறிவித்தார்.

கட்சிச் செயலாளர்களுடன் நேற்று நடத்திய பேச்சுக்களில் காணப்பட்ட இணக்கப்பாட்டை அடுத்தே மீள் வாக்களிப்பு யோசனையை தாம் கைவிட்டதாகத் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை -

வன்னி, மட்டக்களப்பு மாவட்ட இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதி வாக்காளர்களுக்கான வாக்களிப்பு நிலையங்களினதும், ஊர்காவற்றுறைத் தொகுதியினதும் வாக்களிப்பை ரத்துச் செய்து அங்கு புதிய தேர்தலுக்கு உத்தரவிடுமாறு தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் இரா. சம்பந்தன் தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

(க)

தேர்தல் முடிவுகளை பொ.ஐ.மு. நேர்மையாக ஏற்றுக்கொள்கிறது

முன்னாள் பிரதமர் ரட்ணசிறி தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.8

தேர்தல் முடிவுகளை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி நேர்மையாக ஏற்றுக் கொள்வதாக முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா தெரிவித்துள்ளார்.

"மக்கள் புதிய அரசை விரும்புகின்றனர். எனவே அவர்களின் ஜனநாயக உரிமையை மீறக்கூடாது. தேர்தலுக்குப் பிந்திய வன்முறைகளைத் தடுப்பதற்கு புதிய அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்" என அவர் கூறினார்.

ஜனநாயகப் பாரம்பரியத்தைக் கடைப்பிடித்து எதிர்க்கட்சியில் அமரும் தமது அங்கத்தவர்கள், நாட்டின் நலனுக்காக எந்தவொரு யோசனைக்கும் ஆதரவளிப்பர் என முன்னாள் பிரதமர் தெரிவித்தார். (க-7)

யாழ்.மாவட்ட.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கவின் சார்பில் ரி.மகேஸ்வரனும் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவாகியுள்ளனர்.

ஈ.பி.டி.பி. சார்பில் தெரிவாகியுள்ள இரு நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் இன்று வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்.மாவட்டத்தில் போட்டியிட்ட கட்சிகள் மற்றும் சுயேச்சைக்குழு பெற்ற மொத்த வாக்குகளின் விவரம் நாளைய உதயனில் வெளியாகும்.

(க)

ரெலோ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலீஸாரின் சோதனையை முடித்துக்கொண்டு லொறி புறப்பட்ட வேளை - அருகிலிருந்த புளொட் அலுவலகத்தில் இருந்தவர்களே தமமைச் சுட்டதாகக் காயமடைந்தவர்கள் தெரிவித்தனர்.

லொறியில் வந்த ரெலோ இயக்கத்தினர் தமது அலுவலகத்தை நோக்கிப் பிஸ்ரலால் சுட்டதுடன், பட்டாசுகளையும் கொளுத்தி வீசியதால் தற்பாதுகாப்புக்காக அங்கிருந்தவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய நேரிட்டதாகப் புளொட் இயக்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை -

இச்சம்பவம் தொடர்பாக துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகச் சந்தேகிக்கப்படும் மூவரை உடனடியாகக் கைதுசெய்யுமாறு வவுனியா நீதிவான் எம்.இளஞ்செழியன் பொலீஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

(க-9)

மதனராஜா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிறப்பித்துள்ளது.

நேற்று இந்த மரணங்கள் தொடர்பான விடயம் யாழ்நீதிமன்றில் நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோதே நீதிவான் இந்த உத்தரவை விடுத்தார்.

மரணமானோரின் விடயங்களைக் கவனிக்க ஆஜரான சட்டத்தரணி அ.விநாயகமூர்த்தி சம்பந்தப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் குடாநாட்டில் சகஜமாகத் திரிவதாகவும் -

ஒருவருக்கு பொலீஸாரின் மெய்ப்பாதுகாவல் வழங்கப்பட்டிருப்பதாகவும் -

தேர்தல் தினமன்று ஐ.தே.க. வேட்பாளர் மகேஸ்வரனைக் கொல்லும் முயற்சியில் அவர்களில் ஒருவர் ஈடுபட்டதாகவும் -

நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

அதையடுத்து இருவரையும் கைது செய்வதற்கான பகிரங்கப் பிடியாணை விடுத்த நீதிவான், அந்த உத்தரவை யாழ்மாவட்டத்துக்குப் பொறுப்பான பிரதி பொலீஸ்மா அதிபருக்கு வழங்குமாறு உத்தரவிட்டு வழக்கை ஒத்தி வைத்தார். (உ)

ஐ.தே.க.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகும்.

ஜே.வி.பி. 16 ஆசனங்களைப் பெற்றுள்ளது. அது மாவட்ட மட்டத்தில் 12 ஆசனங்களையும், தேசியப்பட்டியலில் 3 ஆசனங்களையும் பெற்றுள்ளது. தேசிய மட்டத்தில் 8 லட்சத்துப் 15 ஆயிரத்து 353 வாக்குகள் இக்கட்சிக்குக் கிடைத்தன.

தமிழர் விடுதலைக் கூட்டணி மாவட்ட மட்டத்தில் 14 ஆசனங்களையும், தேசியப் பட்டியல் மூலம் ஓர் ஆசனத்தையும் பெற்றுள்ளது. கூட்டணி பெற்ற மொத்த வாக்குகள் 3 லட்சத்து 48 ஆயிரத்து 146 ஆகும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பெற்ற ஆசனங்கள் ஐந்து. மாவட்ட மட்டத்தில் 4 ஆசனங்களும் தேசியப் பட்டியல் மூலம் ஓர் ஆசனமும் அதற்குக் கிடைத்தது. (உ-7)

புதிய அரசு பதவியேற்றதும்

குழுக்களிடமிருந்து ஆயுதங்கள் ஒரு வாரத்தில் களையப்படும்

மகேஸ்வரன் எம்.பி. கூறுகின்றார்

லண்டன்,டிசெ.8

புதிய அமைச்சரவை பதவியேற்று - நாடாளுமன்றம் கூட்டப்பட்டு - ஒரு வார காலத்தினுள் வடக்கு, கிழக்குப் பிரதேசத்தில் - குறிப்பாக யாழ்.குடாநாடு, வவுனியா போன்ற பகுதிகளில் - இயங்கும் சட்ட விரோத ஆயுதக் குழுக்களிடமிருந்து ஆயுதங்கள் களையப்படும். - இவ்வாறு அறிவித்தார் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஐ.தே.கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன்.

நேற்று பி.பி.ஸிக்கு அளித்த விசேட பேட்டியிலேயே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார். அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ரணில் ஆட்சிக்கு வந்ததும் இனப்பிரச்சினைக்கு புலிகளுடன் பேசித் தீர்வு காண்பதற்கு தீர்க்கமான முடிவு எடுக்கப்படும். புலிகள் மீதான தடை பேச்சுக்கு முட்டுக்கட்டையாக இருக்குமாயின் அது நீக்கப்படும் என்று ரணில் ஏற்கனவே அறிவித்து விட்டார்.

ஐ.தே.க. அரசுடன் புலிகள் பேச்சு நடத்த மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவையில்லை. ஆனால் புலிகள் கோரினால் வெளிநாட்டு மத்தியஸ்தத்துக்கு எமது அரசு இணங்கும்.

புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகள் மீதான அனைத்துத் தடைகளும் நீக்கப்படும். தரைவழிப்பாதை திறக்கப்படும். மருந்து, எரிபொருள், மின்சாரம், தொலைபேசி உட்பட அனைத்து வசதிகளும் வன்னிக்கு வழங்கப்படும்.

இடம்பெயர்ந்தோர் அனைவரும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பி, சகஜ வாழ்வை மேற்கொள்ள சகல வசதிகளும் வழங்கப்படும் - என்றார்.

(உ-9)

ஜெனரல் சரத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு மாவட்டத்தில் ஐ.தே.கட்சி சார்பில் போட்டியிட்ட எம்.எஸ். செல்லச்சாமி, யோகராஜன் ஐ.தே.கவில் அண்மையில் இணைந்த முன்னாள் பௌத்த சாசன அமைச்சர் எதிரிவீர பிரேமரட்ன ஆகியோரும் இம்முறை தோல்வியடைந்தனர். (உ)

வெள்ளிமலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்குகளின் அடிப்படையில் மூன்றாவது இடத்தில் நாடாளுமன்றிற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக முன்னர் தகவல்கள் வெளியான போதிலும் - அவர் 183 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிவாய்ப்பை இழந்துவிட்டதாக நேற்று வெளியான உத்தியோகபூர்வ முடிவுகள் தெரிவித்தன.

தமிழர் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்டு தெரிவாகியுள்ள ரி. தங்கவடிவேல் விருப்புவாக்குகளின் அடிப்படையில் முதலாம் இடத்தையும் ஜோசப் பரராஜசிங்கம் மூன்றாம் இடத்தையும் வகிப்பது குறிப்பிடத்தக்கது.

(க-9)

நெடுந்தீவில் விளையாட்டு போட்டி

யாழ்ப்பாணம்,டிசெ.8

நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான பாரம் பரிய விளையாட்டுப் போட்டி நாளை ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

நெடுந்தீவு உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ் செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் ஏ.பில்பு அரிய நாயகம் கௌரவ விருந்தினராக ஈபி.டி.பியின் நெடுந்தீவுப் பொறுப்பாளர் கே.மோகனும் கலந்துகொள்கின்றனர்.

(உ-9)

ரணில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்று நாடாளுமன்றுக்குத் தெரிவாகினர்.

பொ.ஐ.மு. சார்பில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட முதன்மை வேட்பாளர் ஏ.ஏச்.எம் பௌசி ஒரு லட்சத்து 3 ஆயிரத்து 817 விருப்பு வாக்குகளைப் பெற்றார்.

தொடர்ந்து அர்ஜுனா ரணதுங்க (97,409 வாக்குகள்), சுசில் பிரேம்ஜயந்த, தினேஷ் குணவர்த்தனா, ஜீவன் குமாரதுங்க, பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர, சந்தன கத்திரியாராய்ச்சி ஆகியோர் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்று தெரிவாகியுள்ளனர்.

ஜே.வி.பி. சார்பில் அதன் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ (19,687 வாக்குகள்), சுனில் ஹந்துல் லெக்கியும் கொழும்பு மாவட்டத்திலிருந்து நாடாளுமன்றுக்குத் தெரிவாகியுள்ளனர்.

(உ-7)

மலிவு விலையில் கணனிகளும் உதிரிப்பாகங்களும்

புத்தம் புதிய CD கள்(650 MB / 700 MB), பழைய – புதிய தமிழ்,சிங்கள,ஆங்கில, ஹிந்திப் பாடல்கள் அடங்கிய MP3 CD கள், சகல வகையான Cartridges இற்கும் Ink Refilling, கணனிகளிற்கு உபயோகிக்கும் Ink Jet Papers, Photo Quality Papers, File Holder, Net2Phone Machines விற்பனைக்கு உண்டு.

Pentium - III Celeron

PC SYSTEMS
Jaffna Road, Manipay
(Front of St.Annes Church)
CUSTOMER SUPPORT : 021 – 2556

Pentium - IV Core

முல்லை மாவட்ட மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல்

இடம்:- யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை - மண்டபம் - 02 (Ch$_2$)
காலம்:- இன்று (08.12.2001) சனிக்கிழமை
நேரம்:- முற்பகல் 10.00மணி.

சகல அங்கத்தவர்களும் தவறாது சமுகம் தரவும்.

(95696) – முல்லை மாவட்ட மாணவர் ஒன்றியம்.

ஒஸ்நாடா வெளியீடு

இன்று (08.12.2001) சனி மாலை 4.30 மணிக்கு நடைபெற இருந்த அன்புக் காணிக்கை ஒஸ்நாடா வெளியீட்டு நிகழ்வு, நாளை (09.12.2001) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆஸ்பத்திரி வீதி, அமலமரித் தியாகிகள் தலைமையகம் தொடர்பகத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

(C/19678) – வெளியீட்டுக் குழு.

இதோ விற்பனைக்கு வந்துவிட்டது! IDEAL FOR GIFTS இன்பனிப்புத்தகங்கள்

பிறக்கப்போகும் 2002ஆம் ஆண்டுக்கான

லீலா

பஞ்சாங்க
கலண்டர்கள் - டயறிகள்
(தமிழ் - ஆங்கிலம்)

வண்ணப்படங்களை எண்ணம்போல் தெரிவுசெய்து பெற்றிட விரையுங்கள்!

உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/19663)

☞ வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.12.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.